1970 செப்டம்பர் 5]

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலே தேர்தல் ஆணைக்குழுவின் நேரடிப் பார்வையின்கீழ் தேர்தல் துறை இருக்குமானால் மாநில அரசாங்கமே நல்ல முறையில் நடத்திக் கொள்ளலாம். இது வரையில் இல்லை என்றால், இனி மேலாவது ஏற்படுத்த அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அதற்காகத் தான் மாநில சுய ஆட்சி கேட்கிறோம்.

DR. H. V. HANDE : Is it not a fact that a few months ago in a hurry because there was the threat of mid-term poll, a number of officers were suddenly appointed and they took the census and they are now the final census. Because it was done in a hurry number of complaints have been received. The State Government has also responsibility in the matter and there is a Deputy Secretary (Election). A number of officers were appointed because there was threat of mid-term poll and census was taken in a hurry. In view of the joint responsibility of State Government and Central Government on this issue, will the Hon. Chief Minister state whether any complaints were received because of what I have stated and will the Hon. Chief Minister give us an assurance that those complaints will be considered and examined?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட புகார்கள் எதுவும் வந்ததற்குத் தகவல் இல்லை. அப்படி வருமேயானால் கவனிக்கப்படும்.

தனி நபர்கள் வருவாய்க்கு உச்ச வரம்பு.

---

*190 வினா:—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனி நபர் ஆண்டு வருவாய்க்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, தனி நபர் ஆண்டு வருமானத்துக்கு உச்ச வரம்பு வேண்டுமென்று கேட்டிருக்கின்றீர்கள்

'Taxes on income and plantation agricultural income' இதைத் தவிர, விவசாய வருமானத்தைத் தவிர மற்ற வருமானங்களின் மீது வரி விதிக்கிற உரிமை அரசியல் சட்டத்தில் 7-வது ஷெடியூல் 82-வது என்ட்ரியிலே போட்டு மத்திய அரசைச் சார்ந்து இருக்கிறது. அந்த அதிகார வரம்பு நம்மிடத்தில் இல்லாததால் அதைப்பற்றி நாம் பரிசீலனை செய்ய முடியாமல் இருக்கிறோம்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதற்குக் காரணம் வருமான வித்தியாசம் தான். அந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதற்கு வருமானத்திற்கு உச்ச வரம்பு கொண்டு வர அரசு முயற்சி எடுக்குமா ? குறைந்த பட்சம் மாத சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிற அலுவலர்கள் இடையே

உள்ள ஏற்றத் தாழ்வுகளைப் போக்குகின்ற முறையிலே சம்பளத்திற்கு உச்சவரம்பு கொண்டுவர முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, வருமானத்திஞல் மட்டும் என்பதல்ல. வருமானம் இல்லாமல் சம்பாதிக்கக் கூடியவர்களிடையே இருக்கிற ஏற்றத்தாழ்வுகள், சுரண்டல்கள் இவைகள் எல்லாம் அகற்றப்பட்டு சம வாய்ப்புகளும், சம உரிமைகளும் பெருக வேண்டுமென்று இன்றைக்கு ஆளுகிற நம்முடைய கட்சியின் சித்தாந்தம். ஆனல் நம்முடைய முதல்வர் அவர்கள் கொஞ்ச நேரத்திற்கு முன் சொன்னதைப்போல, திரும்பத் திரும்பச் சொன்னல் மாநில சுயஆட்சி, மத்தியில் கூட்டாட்சி என்று இருக்கும். துரதிருஷ்டவசமாக அக்ரிகல்சுரல் இன்கம் தவிர மற்ற எல்லா வரி விதிக்கிற உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது என்பது மட்டுமல்ல, அக்ரிகல்சுரல் இன்கம்முக்கும் வரி விதிக்கிற உரிமையில் மத்திய சர்க்கார் ஆக்கிரமிப்பு செய்து வருகிருர்கள். அதைப் பலவகையிலும் இந்த அரசு ஆட்சேபித்து வருகின்றது. இது கட்டுப்பட்ட அரசாக இருக்காது. இப்படிப்பட்ட பெரிய காரணங்களிலே நம்முடைய யோசனைகள் சொல்வதற்கு கூட கட்டுப்படுத்தப்பட்ட நிலைமை இருக்கிறது.

Treasury and Accounts Branch

* 191 *Q*.—THIRU K. CHEEMAICHAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the Government have given instruction to the State Treasuries to reorganise the method of working of the Treasury and Accounts Branch based on the recommendation of the Administrative Reorganisation Commission; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, on the recommendation of the Administrative Reforms Commission, it is referred to the Director of Treasuries and Accounts and the Accountant-General, Madras for their remarks. On receipt of their remarks, the recommendation will be examined and the view of the State Government will be communicated to the Government of India.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக்குழு கூட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக்குழுவின் கூட்டம் இன்று காலை 10 மணி அளவில் பேரவைத் தலைவரின் அறையில் கூடும். அதற்குக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.